[1972 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்து அனுப்பச் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சூப்பர் மார்க்கெட் என்பதற்கு சிறப்பு அங்காடி நல்ல தமிழ்ப் பெயரா? அல்லது பேரங்காடி நல்ல தமிழ்ப் பெயரா? இதை அரசு பரிசீலனை செய்து எது நல்லது என்று அறிவிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சிறப்பு அங்காடி என்று சொல்ல முடியும். சூப்பர் மார்க்கெட், மினி மார்க்கெட் என்று இரண்டு வகை இருக்கிற காரணத்தினால், ஒன்றை பேரங்காடி, மற்றொன்றை சிற்றங்காடி என்று சொல்லத் தேவைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிற்றங்காடியா, சிறப்பு அங்காடியா?

கள்ளக்குறிச்சி வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்

***830 வினா.—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் செயல்படவில்லை என்றும், கடன் தவணை முறைப்படி சரியாக வசூலாகவில்லை என்றும் சொல்லப் படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். சங்கம் 1—7—1964 முதல் செயல்படவில்லை. சங்கத்திற்குக் கொடுத்த கடனில் 1—3—1972-ல் அசல் ரூ. 2,910.46-ம் வட்டி ரூ. 4,333.70-ம் தவணைப்படி வசூலாகவில்லை.

(இ) சங்கத்தை செயல்படுத்த திருக்கோயிலூர் கூட்டுறவுத் துணைப் பதிவாளர் 7 இயக்குநர்களை புதிதாகத் தேர்ந்தெடுத்து சங்கத்தின் குழுவை 18—3—1970-ல் புதிதாக அமைத்தார். ஆனால் சிறிது காலத்திற்குப் பின் இச் சங்கம் மறுபடியும் செயல்படவில்லை. ஆகவே கூட்டுறவுத் துணைப் பதிவாளர் முதுநிலை ஆய்வாளரை பொதுச்சபையைக் கூட்டி நிர்வாகக் குழுவைத் திரும்ப அமைக்க அதிகாரம் அளித்திருக்கிறார். தேர்தல் அதிகாரி தேர்தல் நடத்து வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். கூட்டுறவுத் துணைப் பதிவாளர் தவணை கடந்த கடன்களை அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் வீடு கட்டுவதற்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் வீடுகள் கட்டப்படவில்லை; சங்கம் செயல்படாமல் இருக்கிறது. ஆகவே இந்தச் சங்கத்தை நல்லமுறையில் நடைபெறச் செய்ய மானியங்கள் வழங்க வேறு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தைப் பொறுத்த வரையில் நிலம் வழங்கப்பட்டதற்கு முழுத் தொகையும் இன்னும் தரப்படவில்லை. இந்தச் சங்கத்திற்குக் கொடுக்கப் பட்ட கடனும் இன்னும் வசூலாகவில்லை. கடனைத் தீவிரமாக வசூலிப்பதற்கு இப்போது கூட்டுறவுத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கடன் முழுவதும் வசூலான பின்புதான் மீண்டும் சங்கத்தை நல்லமுறையில் செயல்படுத்த முயற்சி செய்யப்படும்.

சென்னையில் சுழலும் ஓட்டல்.

* 831 வினு.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் பல மாடிக் கட்டட சுழலும் ஓட்டல் ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னையில் பல மாடிக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அக் கட்டடத்தின் ஒரு மாடியில் சுழலும் ஓட்டல் ஒன்று அமைப்பதற்கான இடமும் வரைவு படத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, கட்டப்பட இருக்கின்ற இந்த ஹோட்டல் எத்தனை மாடிகளைக் கொண்டதாக இருக்கும்? அவை என்னென்ன மாதிரியாக இருக்கும்? வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்குமா அல்லது உள்நாட்டில் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதி யாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தகுந்த வகையில் பம்பாயிலிருந்து திரு. சி. எஸ். கே. ராஜ் அவர்கள் அளித்த 65 மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டும் திட்டம் அரசினர் கவனத்தில் இருக்கிறது. அதுபற்றி இன்னும் இறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லை. இன்னும் அமைச்சரவை மட்டத்தில் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியிருப் பதால் கட்டப்படக்கூடிய அறைகள் எந்த மாதிரி இருக்கும், அறைகள் எந்த எந்த அளவில் இருக்கும் என்பன போன்ற விபரங்களை இப்போது தெரிவிப்ப தற்கில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Hogenakkal with its waterfall is going to become one of the most famous and ideal tourist centres and all are awaiting to see that it becomes such a centre. So, may I know from the Hon. Minister whether such a hotel will be constructed there?